செய்தி வெளியீடு எண் : 2582 நாள் : 21.12.2023

# செய்தி வெளியீடு

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், பாரூர் பெரிய ஏரியிலிருந்து பாசனத்திற்காக ஏரியின் கிழக்கு மற்றும் மேற்கு பிரதான கால்வாய்களில் முதல் ஐந்து நாட்களுக்கு நாற்றுவிட தண்ணீர் விட்டும், பிறகு முறைப்பாசனம் மூலம் 3 நாட்கள் மதகை திறந்துவிட்டும், 4 நாட்கள் மதகை மூடி வைத்தும் சுழற்சி முறையில் நாள் ஒன்றுக்கு 6.00 மில்லியன் கனஅடி வீதம் 22.12.2023 முதல் 24.04.2024 முடிய 125 நாட்களுக்கு மொத்தம் 343.00 மில்லியன் கனஅடி தண்ணீரை இரண்டாம் போக சாகுபடிக்கு திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் போச்சம்பள்ளி வட்டத்தில் உள்ள 2397 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**
**நீர்வளத்துறை**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in